**DEPOSITION OF WITNESS.**
**(Chapter XXIII, Cr.P.C)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, BODINAYAKANUR.**

**STC.No.1086/2023**

Deposition of **DW-1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | சகுந்தலா | **Age** | : | 51/2026 |
| **Husband's Name** | : | லோகராஜன் | **Religion** | : | இந்து |
| **Village** | : | நாகலாபுரம் | **Calling** | : | டெய்லர் |
| **Taluk** | : | தேனி | **Caste** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **17/04/2026.**

எதிரி ஆஜரில்லை. குவிமுச 317ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது. இருதரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

4)நாகராணி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பினார் என்றும், அதனை நான் பெற்றுக் கொண்டேன் என்றும் சொன்னால் சரிதான். அந்த வழக்கறிஞர் அறிவிப்பிற்கு மறுப்பு தெரிவித்து நான் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால், அந்த சமயத்தில் நாங்கள் ஊரில் இல்லை காலம் தாழ்ந்து தான் எனக்கு தெரிய வந்தது. என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ-4 அஞ்சல் ஒப்புதல் அட்டையில் உள்ள கையொப்பம் என்னுடையதல்ல. மனுதாரர் ம.சா.ஆ-4ல் உள்ள கையொப்பம் என்னுடையதுதான் என்றும், நான் தற்போது வழக்கிற்காக உண்மையை மறைத்து பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள காசோலை என்னுடைய வங்கிக் கணக்கிற்கு கொடுக்கப்பட்ட காசோலை என்றால் சரிதான். அந்த காசோலையில் நான் கையொப்பம் செய்து பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றால்

சரியல்ல . கையொப்பம் செய்து கொடுத்தேன் , நான் பூர்த்தி செய்து கொடுக்கவில்லை. என்னுடைய செல்போன் எண் 7094734632 ஆகும். நான் எனது மேற்படி கைபேசி எண்ணில் இருந்து,நாகராணிக்கும், அவரது கணவர் செந்தில்குமார் என்பவருக்கும் பலமுறை போன் செய்து பேசியுள்ளேன் என்றால் இல்லை.

6) என்னுடைய செல்போன் எண்ணிலிருந்து புகார்தாரருக்கு நான் பேசவில்லை என்பதற்கு ஆதரவாக எனது கால் ரெக்கார்ட் டீட்டெயிலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா? என்றால் தயாராக உள்ளேன். நாகராணி மற்றும் அவரது கணவர் செந்தில்குமார் பணம் கேட்டு தொந்தரவு செய்தது சம்பந்தமாக நான் காவல் நிலையத்தில் எதுவும் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. ஊரில் பெரியவர்களிடம் சொல்லி அவ்வாறு பேசக்கூடாது என சொன்னேனா என்றால் இல்லை.மாணிக்கவாசகம் என்பவரிடம் கொடுத்ததாக சொல்லும் காசோலையை அவர் திருப்பி தரவில்லை என்பதற்கு ஆதரவாக அவர் மீது புகார் கொடுத்தேனா என்றால் அவர் இறந்து விட்டதால் அவர் மீது புகார் கொடுக்கவில்லை.

7) என்னுடைய காசோலைக்கு பணம் தர வேண்டாம் என நிறுத்தி வைக்க சொல்லி வங்கிக்கு கடிதம் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை.புகார்தாரரிடம் பணம் பெற்றுக் கொண்டு, நான் தான் காசோலையை கையொப்பம் செய்து பூர்த்தி செய்து கொடுத்தேன் என்றும், தற்போது வழக்கிற்காக இல்லை என மறுத்து பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மாணிக்கவாசகம் என்பவரது மனைவியின் பெயர் என்னவென்றால் எனக்கு தெரியாது.

Taken down before me in Open Court, and read over to the witness and admitted by the deponent to be correct.

NALLA KANNAN M
Digitally signed by NALLA KANNAN M
Date: 2026.04.17 17:33:55 +0530

**Judicial Magistrate,**

**Bodinayakanur.**